




- வாழ்வோம்

உயிர்த்துடிப்பாக வாழ்ந்து மறைந்த சி.பி.பவளவண்ணன்!



1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியை முதன் முதலில் கழகம் கைப்பற்றிய போது, சைதாப்பேட்டையில் இருந்து மாமன்ற உறுப்பினராகத் தேர்வானவர். 1967-இல், தமிழ்நாட்டில் கழகம் ஆட்சிக்கு வந்த அதே காலகட்டத்தில், சென்னை மாநகராட்சியின் துணை மேயராக பவளவண்ணன் பொறுப்பேற்றார்.

துணை மேயராகப் பதவியேற்பு

அப்போது தான், அன்றைய பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞருக்கு, சென்னையில் சிலை அமைக்க முயற்சி செய்து, அது நிறைவேறாமல்போனது. 'எனக்கு சிலை அமைப்பதைவிட, சென்னைக்குப் பெருமை சேர்க்கும் பிற பொதுப்பணிகளில் பவளவண்ணன் கவனம் செலுத்த வேண்டும்' என முயன்றது நடக்கவில்லை என்றாலும், 1973-ஆம் ஆண்டு, கலைஞர் அவர்களின் 50-வது பிறந்தநாளைக் கொண்டாடும் விதமாக, அன்று சென்னையின் நுழைவாயிலாக இருந்த சைதாப்பேட்டை மறைமலையடிகள் பாலம் அருகே பொன்விழா ஆண்டு அலங்கார வளைவை நிறுவி, கலைஞரின் மீது கொண்ட அன்பினைப் பறைசாற்றினார். பவளவண்ணன் அவர்கள் உருவாக்கிய அந்த ***'கலைஞர் வளைவு'*** *இன்றும் சைதாப்பேட்டைக்கு வரும் பொதுமக்களை வரவேற்கும் ஒரு வரலாற்றுச் சின்னமாகத் திகழ்கிறது.*

சென்னை மாநகராட்சித் துணை மேயராக இருந்த காலத்தில், சைதாப்பேட்டையில் பனகல் மாளிகை அருகே அமைந்துள்ள பகுதியில் இருந்த குடிசைப்பகுதிகளை அகற்றிவிட்டு, அங்கு வசித்த ஏழை மக்களுக்குக் குடிசைமாற்று அடுக்குமாடி வீடுகளைக் கொண்டுவந்தவர். சைதாப் பேட்டை பஜார் வீதி, தர்மராஜா கோயில் தெரு போன்ற மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகளில் முறையான வடிகால் வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

சென்னை வாழ் மக்களுக்கும், கழகத்தினருக்கும் களப்பணியாளராக விளங்கியவர், கலைஞரின் அன்பும் அணுக்கமும் பெற்றிருந்த கலைப்பற்றாளர், பவளவண்ணன் அவர்கள் 1975-ஆம் ஆண்டு அக்டோபர் 13 அன்று, உடல்நலிவுற்று திடீரென இயற்கை எய்தினார். 'கழகத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பு' என கலைஞர் எழுதிய 'பவளவண்ணன் ஒரு பாடம்' கடிதம், பவளவண்ணன் மீதான அன்புக்குச் சான்றாகும். "என் உயிரனைய உடன்பிறப்புகளில் ஒருவரான பவளவண்ணன், மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக வந்த செய்தி, 'என் நெஞ்சிலே செந்தீயாகத் தாக்கிச் சுட்டது. சிரித்த முகமும் சிரம்தாழ்த்தி என் எதிரில் நிற்கும் பணிவும், கழகக் காரியங்கள் ஆற்றுவதில் எறும்பின் சுறுசுறுப்பும் என்னிடத்திலும் கழகத்தினரிடத்திலும் இதயத்தைப் பறிகொடுத்த பாசமும்' என நீண்ட அந்தக் கடிதத்தில், அந்தக் காலகட்டத்தின் அரசியல் சூழலைப் பேசி, "இந்த நேரத்தில் கழகத்துக்கு நமது உழைப்பு தேவைப்படுகிறது, நேர்மையான உழைப்பு, நாணயமான செயல், வலிவான உடல், திடமான உள்ளம் இத்தனையும் தேவை. இந்தச் சூளுரையை பவளவண்ணன் கல்லறைக்கு முன்னால் எடுத்துக்கொள்வோம்" என்று நெஞ்சம் உருகினார். அந்தச் சூளுரையைக் கழகம் என்றும் மறக்காது என்பதற்கு ஏற்ப, சென்னையில் இன்றையக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேயராக இருந்தபோது கொண்டுவந்த சென்னை சைதாப்பேட்டை - ஜாபர்கான் பேட்டை பகுதிகளை இணைக்கும் ரயில்வே சுரங்கப்பாதைக்கு, 'துணை மேயர் சி.பி.பவளவண்ணன் சுரங்கப்பாதை' எனப் பெயர் சூட்டி, தீர்மானம் கொண்டுவந்தார்.

2009-ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் அதை அறிவித்த கலைஞர், "என்னுடைய உயிர்த்துடிப்பாக வாழ்ந்து மறைந்த தம்பி பவளவண்ணன் பெயரால் 'பவளவண்ணன் சுரங்கப்பாதை' என்று பெயரிடுகிறேன்" என்றார். காலம் கடந்தும் அந்த அன்பு உடன்பிறப்பின் பெயரை நிலைக்கவைத்தார் கலைஞர்.

...துடிக்கும்

180 உடன்பிறப்பே

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த சி.பி.பவளவண்ணன் அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

1968-இல் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தபோது, நடத்திய உலகத் தமிழ் இரண்டாவது மாநாட்டையொட்டி, சென்னைக் கடற்கரையில் பத்து தமிழ்ச் சான்றோர், ஆன்றோர் சிலைகள் நிறுவப்பட்டன. இன்றும் அதைப் பார்த்து பாராட்டாதவர்கள் இல்லை. அன்று, அதைப் பார்த்து வியந்த கழக உடன்பிறப்பு ஒருவர், அந்தச் சிலைகள் உருவாவதற்கு முன்னின்று செயல்பட்ட முத்தமிழறிஞருக்கு, ஒரு சிலை இல்லையே என ஏங்கினார். அதற்காக, அண்ணா சாலையில் அன்று இருந்த ஜெமினி ஸ்டுடியோ அருகே கலைஞர் சிலையை எழுப்ப பணிகளைத் தொடங்கி, இரவோடு இரவாக பீடத்தை அமைத்துவிட்டார். சிலையைத் திறந்துவைக்க பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ஒப்புதலும் பெற்று, தேதியும் குறித்துவிட்டார். அந்தச் சமயத்தில், வெளி மாவட்டச் சுற்றுப்பயணத்தில் இருந்த கலைஞர், சென்னை திரும்பியதும் இந்தச் செய்தியறிந்து, அண்ணா அவர்களிடத்தில் "தாங்கள் இருக்கும்போதே எனக்கு சிலை அமைப்பது முறையாகாது" என்ற விளக்கத்தை அளித்து, அந்த சிலைத் திறப்பு விழாவைத் தடுத்து நிறுத்தினார். அந்தப் பீடத்தை இடித்துத்தள்ள உத்தரவிட்டதுடன், 'தனக்குச் சிலை வேண்டாம்' என்று பத்திரிகை வாயிலாக அறிக்கையும் வெளியிட்டார். அப்படி முத்தமிழறிஞருக்கு அன்பு நெருக்கடி அளித்த உடன்பிறப்பு, சி.பி.பவளவண்ணன். சென்னை மாநகராட்சியின் துணை மேயராக இருந்தவர். கலைஞரின் சொற்களில் சொல்வதெனில், கலையார்வமிக்க நண்பர்.

சென்னை சைதாப்பேட்டையைச் சேர்ந்தவர். இவருடைய தந்தையின் பெயர், பெருமாள்சாமி. இளம் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து, கட்சியின் அடிமட்டத் தொண்டனாகத் தனது அரசியல் வாழ்வைத் தொடங்கியவர். சைதாப்பேட்டையைக் கழகத்தின் அசைக்க முடியாத கோட்டையாக மாற்றிய தொடக்ககால முன்னோடி, பவளவண்ணன். கழகத்தின் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற பவளவண்ணன், சைதாப்பேட்டைப் பகுதியிலிருந்து ஒரு வலுவான ஆளுமையாக உருவெடுத்தவர்.

அன்று கலைஞர் வெளியிட்ட அறிக்கையும், அதற்குப் பலனாக பவளவண்ணன் செய்த பல மக்கள் நலத் திட்டங்களும் சைதாப்பேட்டையில் இன்றும் அவரது புகழைப் பறைசாற்றும்.

பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞருடன் இணைந்து, சென்னை நகரின் உள்கட்டமைப்பு மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களுக்குப் பவளவண்ணன் பல முக்கிய அரசாணைகளைப் பெற்றுத்தந்தார்.

1967-ஆம் ஆண்டு மற்றும் 1971-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல்களிலும் சைதாப்பேட்டைத் தொகுதியில் கலைஞர் வெற்றிபெற்றபோது, அந்த வெற்றிக்குப் பின்னால் அடிமட்டத் தொண்டர்களை ஒருங்கிணைத்து, தேர்தல் வியூகங்களை வகுத்து, கலைஞரின் வெற்றிக்குத் தூணாக நின்றவர், சி.பி.பவளவண்ணன். அதனால், பவளவண்ணன் மீது அளப்பரிய அன்பும் பற்றும் கொண்டிருந்தார் கலைஞர். அதே போல பவளவண்ணன் அவர்களும் கலைஞர் மீது கொண்ட பற்று அளப்பரியது. 1968-இல் கலைஞருக்குச் சிலை அமைக்க

நீரை.மகேந்திரன்

தூய சக்தியா? ஊழல் சக்தியா?

உளழலுக்கு எதிரான உத்தமர்கள் போல தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக்கொள்ளும் த.வெ.க. ஆட்சியாளர்கள்மீது, கடந்த 4 மாதங்களில் எண்ணற்ற ஊழல் குற்றச்சாட்டுகள் வந்துவிட்டன. `அரசு வழக்கறிஞர் நியமனத்தில் ஊழல்', `நீர்வளத்துறை ஒப்பந்தங்களில் ஊழல்',`மின்சாரக் கொள்முதலில் ஊழல்',`விதிகளை மீறி குவாரிகளுக்கு அனுமதி வழங்கியதில் ஊழல்', `ஆம்னி' பேருந்துகளுக்கு அனுமதி வழங்கியதில் ஊழல்',`பழனி கோயில் நில முறைகேடு' என எண்ணற்ற ஊழல் குற்றச்சாட்டுகள் வந்துவிட்டன. அந்த வரிசையில் புதிதாக இணைந்திருப்பது, பாமாயில் கொள்முதல் ஊழல் குற்றச்சாட்டு.

இதுதொடர்பாகத் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள பிரின்ஸ் என்பவர், `600 இலட்சம் பாக்கெட்டுகள் பாமாயில் கொள்முதலில் ஊழல் நடந்துள்ளதா என்பதை, `அறப்போர் இயக்கம்' வெளிக்கொண்டுவர வேண்டும். டெண்டரில் 8 நிறுவனங்கள் பங்கேற்றன. வழக்கமான டெண்டர் நடைமுறைப்படி, மற்ற நிறுவனங்கள் L-1-ஆகத் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் விலைக்குக் கொடுக்க முன்வந்தால், அவர்களுக்கும் சப்ளை ஆர்டர் பிரித்துக் கொடுக்கப்படும். 4 நிறுவனங்கள் ஒரே விலையில் கொடுக்க முன்வரும்போது, மொத்தக் கொள்முதல் விகிதாச்சார அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படும்.

அதன்படி L-1 நிறுவனத்தின் விலைக்கே பாமாயில் சப்ளை செய்ய L-2, L-3, L-4 நிறுவனங்களும் ஒப்புக்கொண்டன. ஆனால், முதற்கட்டமாக 200 இலட்சம் பாக்கெட் பாமாயில் கொள்முதலில் விகிதாச்சார முறையில் கொடுக்கவில்லை என்று நீதிமன்றம் சென்றுள்ளது, ஒரு நிறுவனம். அதாவது, L-1 நிறுவனத்திற்கு 80 இலட்சம் பாக்கெட்டுகள், L-2 நிறுவனத்திற்கு 52 இலட்சம் பாக்கெட்டுகள், L-3 நிறுவனத்திற்கு 34 இலட்சம் பாக்கெட்டுகள்,

L-4 நிறுவனத்திற்கு 34 இலட்சம் பாக்கெட்டுகள் ஆர்டர் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வேறுபாட்டால், பாமாயில் கொள்முதல் செய்ய நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதற்குப் பெயர் என்ன, ஊழல் இல்லையா?" என்று பதிவிட்டுள்ளார் அவர்.

ஃப்ளாஷ்பேக்



எஸ்.ஜார்ஜ்



நல்லதொரு சான்றாக என்றும் என் நினைவில் நிற்கும்!

திராவிட இயக்கக் கருத்துகளில் ஈடுபாடு ஏற்பட்டு, கடந்த 35 ஆண்டுகளாகக் கழகத் தலைவரோடு பயணித்துவருகின்றேன். ஒரு சாதாரண தொண்டனாக இருந்து, ஊட்டியின் நகரச் செயலாளராக 2013-இல் பணிப்பொறுப்பை ஏற்று, கழகப் பணிகளை முன்னெடுத்து வருகிறேன். ஊட்டியின் மாமன்ற உறுப்பினராகவும் கடந்த நான்கு முறையாகத் தேர்வுசெய்யப்பட்டு, மக்கள் பணியும் ஆற்றுகின்றேன். 2013-இல் கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து ஆசி பெற்ற போது எடுத்த இந்தப் படம், என்னுடைய கட்சிப் பணிக்குக் கிடைத்த நல்லதொரு சான்றாக என்றும் என் நினைவில் நிற்கும்.

- எஸ்.ஜார்ஜ், நகரக் கழகச் செயலாளர், உதகை மாமன்ற உறுப்பினர், ஊட்டி, நீலகிரி மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1955 — ஜனவரியில், `கைத்தறி வாரம்' அறிவித்தார் பேரறிஞர் அண்ணா.

1958 — பழனியில் மாவட்ட 3-வது மாநாடு, திரைப்படத்துக்காகப் படமாக்கப்பட்டது.

1960 — கழகப் பொருளாளராக கலைஞர் போட்டியின்றித் தேர்வு.

1963 — சென்னை நுங்கம்பாக்கத்தில், கழகத்தின் இந்தி எதிர்ப்பு மாநாடு.

1967 — முதலமைச்சர் அண்ணா, சட்டமன்ற மேலவை உறுப்பினரானார்.

1986 — தமிழ்நாட்டில், சட்டமேலவையைக் கலைத்தார் எம்.ஜி.ஆர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900